www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi9SS

# தென்காசி மாவட்டம்
## முழு ஆண்டுத் தேர்வு - 2025

-----

**வகுப்பு 9**
**சமூக அறிவியல்**

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **14×1=14**

1) பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் .......... ஆவார்
அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்

2) மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர்
அ) மார்க்கோபோலோ ஆ) ஃபாஹியான்
இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்

3) ........... ம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கையின் படி அமெரிக்க சுதந்திரப் போர் முடிவுக்கு வந்தது
அ) 1776 ஆ) 1779 இ) 1781 ஈ) 1783

4) இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர் ..........
அ) போர்த்துகீசியர் ஆ) பிரெஞ்சுக்காரர் இ) டேனிஷார் ஈ) டச்சுக்காரர்

5) .............. ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்
அ) துள்ளல் ஆ) வண்டல் விசிறி இ) டெல்டா ஈ) மலைஇடுக்கு

6) .............. உயிர்வாழ இன்றியமையாத வாயுவாகும்
அ) ஹீலியம் ஆ) கார்பன் - டை - ஆக்சைடு
இ) ஆக்சிஜன் ஈ) மீத்தேன்

7) **கூற்று (A)** : மூன்றாம் நிலைத் தொழிலில் பொருள்கள் நேரடியாக உற்பத்தி செய்யப்படாமல் உற்பத்தி செய்வதற்கான செயல்முறைகளில் உறுதுணையாக உள்ளது

**காரணம் (R)** : மூன்றாம் நிலைத் தொழிலில் ஈடுபடும் மக்கள் முழுமையாக சுற்றுச்சூழலுக்குச் சாதகமாக செயல்படுகிறார்கள்

அ) A மற்றும் R இரண்டும் தவறு
ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் Aவானது Rக்கு விளக்கம் தரவில்லை
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A மற்றும் R இரண்டும் சரி. A வானது Rக்கு சரியான விளக்கம் தருகிறது

8) தீ விபத்து ஏற்படும் போது நீங்கள் அழைக்கும் எண்
அ) 114 ஆ) 112 இ) 115 ஈ) 118

9) உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடு ..........
அ) கனடா ஆ) இந்தியா
இ) அமெரிக்க ஐக்கிய நாடு ஈ) சீனா நாடுகள்

10) ஒரு 10 வயது பையன் கடையில் வேலைபார்க்கிறான். எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?
அ) சமத்துவ உரிமை
ஆ) சுதந்திர உரிமை
இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை
ஈ) சமய சுதந்திர உரிமை

11) சாலை சமிக்ஞையில் எந்த நிறம் தயாராக இரு என்பதை உணர்த்துகிறது?
அ) சிவப்பு ஆ) ஊதா இ) மஞ்சள் ஈ) பச்சை

12) நிகர நாட்டு உற்பத்தி ............... என்றும் அழைக்கப்படுகிறது
அ) தலா வருமானம் ஆ) நாட்டுவருமானம்
இ) வாங்கும் திறன் சமநிலை ஈ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

13) இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை

14) வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்
அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) வேலூர்

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்:28)** **10×2=20**

15) சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக
16) கலிங்கர் கல்வெட்டு குறிப்பு கூறுவது என்ன?
17) பிரான்சின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு பற்றி எழுதுக.
18) இந்திய பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



19) காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை?
20) எரிமலை என்றால் என்ன?
21) உயிர்க்கோளம் என்றால் என்ன?
22) நில வரைபடம் என்றால் என்ன?
23) ஆதாரம் விங்களின் மக்களாட்சிக்கான வரையறையைக் கூறுக
24) போக்சோ (POCSO) - வரையறு
25) இருசக்கர வாகனம் ஓட்டும் போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?
26) பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
27) ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு நிகர நாட்டு உற்பத்தி பயனுள்ள அளவீடாகக் கருதப்படாது - ஏன்?
28) அந்நியச் செலவாணி என்றால் என்ன?

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண்:42) 10×5=50**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக**
i) பழங்கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ........ எனப்படும்
ii) ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது .................. ஆகும்
iii) பிறசார்பு ஊட்ட உயிர்கள் என அழைக்கப்படுபவை ...............
iv) தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள் ...............
v) மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையகம் ...............

30) **பொருத்துக**
i) பாரோ - பாதுகாக்கப்பட்ட நகரம்
ii) அக்ரோபொலிஸ் - இரண்டாம் நிலை நிலத்தோற்றம்
iii) கண்டச்சரிவு - அர்த்த சாஸ்திரம்
iv) வாக்குரிமை - எகிப்திய அரசர்
v) சாணக்கியர் - 18

31) **வேறுபடுத்துக**
i) நிலக்காற்று - கடற்காற்று
ii) வெப்பமண்டலத் தாவரங்கள் - பாலைவனத் தாவரங்கள் காரணம் கூறு
iii) கண்டத்திட்டுகள் சிறந்த மீன் பிடித்தளங்களாகும்

32) சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக
33) இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்
34) புவி அமைப்பை விவரி
35) மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
36) திசைகள் - தகுந்த படம் வரைந்து விளக்குக
37) மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38) 1992 ஆண்டு 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
39) சாலை பாதுகாப்பு விதிகளைப் பற்றி விவரி
40) நவீன உலகில் பணபரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரி
41) நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி
42) **தென்இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்**
அ) மதுரை ஆ) கீழடி இ) கொற்கை ஈ) அரபிக்கடல் ஈ) சென்னை

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2×8=16**

43) அ) தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்ககால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின?

**(அல்லது)**

ஆ) 1789ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிரெஞ்சுத் தத்துவ ஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.**
i) சீனா
ii) இங்கிலாந்து
iii) மெகல்லன் கடல்வழி தடங்கள்
iv) இந்திய பெருங்கடல்
v) பசிபிக் நெருப்பு வளையம்
vi) ஆஸ்திரேலியா
vii) பிலிப்பைன்ஸ் தீவுகள்
viii) ஏதேனும் ஒரு பாலைவனம்

**(அல்லது)**

ஆ) i) எகிப்து
ii) இந்தியா
iii) வாஸ்கோடகாமா கடல் வழிதடம்
iv) பசிபிக் பெருங்கடல்
v) பிரெய்ரி
vi) வட அமெரிக்கா
vii) நன்னம்பிக்கை முனை
viii) ஏதேனும் ஒரு டெல்டா

- - - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com